CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No 6/5, Layards Road, Colombo 05, **Tel:** +094-11 3010664
**Fax**: +094-11 2505228 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் - 2018

## தேர்தல் தின இறுதி அறிக்கை

10 பெப்ரவரி 2018

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது தேர்தல் களம் மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக, அண்ணளவாக 2000 கண்காணிப்பாளர்களை (நிலையான கண்காணிப்பாளர்கள் உள்ளடங்கலாக) ஈடுபடுத்தியுள்ளது. மேலும், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது நாட்டின் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கு 90 நடமாடும் குழுக்களை கண்காணிப்பிற்காக அனுப்பியுள்ளது.

நடைபெற்று முடிந்த இத்தேர்தல் மற்றும் இத்தேர்தலுக்கான பிரச்சாரங்களும் அமைதியான முறையில் இடம்பெற்ற காரணத்தினால் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்று முடிந்த தேர்தல் என்ற சிறப்பினை இத்தேர்தல் தம்வசப்படுத்திக் கொண்டது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது, இன்று மாலை 4.00 மணியளவில் மொத்தமாக 145 சம்பவங்களைப் பதிவு செய்திருந்தது. இவற்றுள் 21 சம்பவங்கள் பாரதூரமானவையாகவும், 124 சிறிய சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இச்சம்பவங்களுள் 44 முறைப்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவும், 33 முறைப்பாடுகள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு எதிரானதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொருட்களை பகிர்ந்தளித்தல், வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், வாக்களிப்பு நிலையங்களைச் சுற்றி பிரச்சார ஆவணங்களைக் காட்சிப்படுத்துதல் மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் வேட்பாளர்கள் மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்கள் கூடியிருந்தமை தொடர்பிலேயே பெரும்பாலான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவற்றுள் ஐம்பதிற்கும் மேற்பட்ட சம்பவங்கள் வட மாகாணத்திலிருந்தேப் பதிவு செயயப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், அச்சம்பவங்கள் எவையும் பாரதூரமான சம்பவமாக வகைப்படுத்தப்படவில்லை. அத்துடன் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகின்றபோது இத்தேர்தலில் இராணுவத்தினரின் தலையீடு தொடர்பாக எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை. பிரச்சாரம் செய்தல், பிரச்சார ஆவணங்களை வாக்களிப்பு நிலையங்களுக்கருகில் காட்சிப்படுத்தல் போன்ற சம்பவங்களே பெருமளவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த கால உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களுடன் ஒப்பிடும் போது, இம்முறை அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அதிகளவான வாக்காளர்கள் வாக்களித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இத்தேர்தல் தினத்திலே சுதந்திரமானதும் நியாயமானதுமான ஒரு

தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையினை உருவாக்கிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும், பொலிஸாரிற்கும் மற்றும் அனைத்து தேர்தல் அலுவலர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது 1997 ஆம் ஆண்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைகளுக்கு எதிரான கூட்டணி ஆகியவற்றின் ஒன்றிணைப்பில், தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்கான, சுயாதீனமான மற்றும் கட்சி சார்பற்ற ஒரு அமைப்பாக ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் மனித உரிமைகள் ஆவண நிலையம் (INFORM) ஆகியவற்றின் ஒன்றிணைவாக செயற்படுகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் அனைத்து அறிக்கைகளையும் www.cmev.org என்ற வலைத்தளத்தினூடாக அணுகுவதற்கு இயலும்.



கலாநிதி. பா. சரவணமுத்து
இணை அழைப்பாளர்